**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 74/2025**
**Prosecution Witness:1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.ரமேஷ் (PW1) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **18th day of November 2025** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(Accused Present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):-**

நான் தற்போது கொடுமுடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.04.2025ம் தேதியன்று கொடுமுடி காவல்நிலைய உதவி ஆய்வாளர் திருமதி. தமிழ்செல்வி அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் மதுவிலக்கு கண்காணிப்பு சம்பந்தமாக நானும் 2544 தலைமை காவலர் ரஞ்சித்குமார் மற்றும் உதவி ஆய்வாளர் தமிழ்செல்வி ஆகியோருடன் வடக்கு புதுப்பாளையம் வாய்க்கால் கரையில் காலை 07.45 மணிக்கு கண்காணித்து வந்தபோது ஒரு நபர் கையில் பையுடன் சந்தேகப்படத்தக்க வகையில் நின்று கொண்டிருந்தார். உதவி ஆய்வாளர் தமிழ்செல்வி அந்த நபரை விசாரிக்க அவர் முன்னுக்குபின்னாக பதில் சொன்னார். அவர் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்த்தபோது சுமார் 180 ml அளவுள்ள Black Pearl Brandy பாட்டில் எண்ணிக்கை 13 சீல் உடைக்காத நிலையில் வைத்திருந்தார். அவரை விசாரிக்க அவர் தனது பெயர் பொன்னர்சங்கர் த/பெ.செல்வம், கிட்டக்காடு, திருவரங்குளம், புதுக்கோட்டை மாவட்டம் என்றும் அரசு மதுபானகடைகள் மூடியிருக்கும் சமயத்தில் அதிக விலைக்கு விற்க வைத்திருப்பதாகவும் தெரிவித்தார். உதவி ஆய்வாளர் அன்று காலை 07.45 மணிக்கு கைது செய்து அவர் வைத்திருந்த 180 ml அளவுள்ள Black Pearl Brandy பாட்டில் எண்ணிக்கை 13யும் தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் முதலாவதாக காணப்படும் கையொப்பம் என்னுடையதுதான். அந்த கைப்பற்றுதல்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.18 08:36:05 +0530

மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து அன்று காலை 08.30 மணிக்கு எதிரியின் மீது நிலைய குற்ற எண்.58/2025 ச/பி.4(1)(c) TNP Act படி உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். எதிரியை கைது செய்யவும், வழக்கு சொத்துக்களை கைப்பற்றவும் உதவி ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

எதிரி ஆஜர். எதிரிக்கு குறுக்கு விசாரணை செய்ய போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.11.18 08:36:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், கொடுமுடி.